ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவாரய நம:

# ஆர்ய தர்மம்.

லௌகீகர்:— (வைதிகரைக்கண்டு) சாஸ்திரிகளவாள்! நமஸ்காரம், தரிசனம் கிடைத்து வெகுநாளாயிற்று என்றார்.

வைதிகர்:— அய்யரவாள்! எங்கே காணவேயில்லையே, எப்பொழுது வந்தீர்கள் ?

லௌகி:— நேற்றுத்தான் வந்தேன். பந்துக்கள்வீட்டில் ஒரு விவாஹம் நடந்தது. அதற்காகப்போயிருந்தேன். அதனால்வெகுநாளாய்விட்டது.

வைதி:— கல்லியாணம் நாலைந்துநாள்தானே, இவ்வளவுநாள் என்ன கார்யம் ?

லௌகி:— கல்லியாணத்தில் பலவித ஆக்ஷேபணைகள் நிகழ்ந்துவிட்டன. அவைகளுக்கெல்லாம் ஸமாதானம்செய்து முகூர்த்தநிச்சயம் செய்ய வேண்டியதாயிற்று.

வைதி:— அதென்ன ஆக்ஷேபம் ?

லௌகி:— சிறியதோர் கிராமத்தில் நமது பந்து ஒரு பெரியவரிருக்கிறார். அவரது பௌத்திரிக்கு எட்டாவது வயது நடக்கிறது. இது விவாஹத்திற்குரிய காலமென்று அனுரூபனான வரனை நிச்சயித்து பெரியதோர் நகரத்தில் உத்தியோகத்திலிருக்கும் தன் குமாரனுக்கு லெட்டர் போட, அந்தப்பையன் வந்து, இதென்ன அப்பா! பைத்தியமாயிருக்கிறது. சிறுவயதில் விவாஹம் செய்யப்படாதாமே, பிரௌடையானபிறகுதான் விவாஹம் செய்யவேண்டுமென்று சாஸ்திரமேயிருக்கிறதாமே என்று ஆக்ஷேபித்துவிட்டான். இந்த வார்த்தை அவர் காதிலேயே விழுந்ததில்லை. இதைக்கேட்டவுடன் அந்தப் பெரியவர் திடுக்கிட்டு இது யாரடா சொல்லுவது? நமக்குத் தர்மநிர்ணயத்திற்கு வேதந்தான் மூலப்பிரமாணம். அதில் பாலிகாவிவாஹந்தான் பரம தர்மமெனவும் பிரௌடாவிவாஹம் பெரிய அதர்மமெனவும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதேயன்றி நீ சொல்லுகிறபடியில்லை என்பதாதி சாஸ்திரவசனங்களைப் பலவாறாக உதாஹரித்துச் சொல்லுகிறபோது எங்களுக்கெல்லாம் பெரியவர் சொல்லுவது மிகவும் உசிதமாகவும், சிரேயஸ்கரமாகவும் தோன்றிற்று. உடனே நாங்களெல்லோருமாய்ச் சேர்ந்து பையன் மனதில் படும்படிசொல்லவே அவனும் சாஸ்திரார்த்தத்தை நிச்சயமாயறிந்து கல்லியாணநிச்சயம் செய்து முகூர்த்தம் வைத்து கல்லியாணம் நடந்தது. அதற்காகக் கொஞ்சநாள் ஆய்விட்டது. ஆனாலும் தாங்கள் சொல்லுவதுபோலவே பெரியவர் சொன்னது எங்களுக்கெல்லாம் ஹிதமாகத் தோன்றிற்று. இப்படியே யாவரும் நிச்சயித்து தர்மத்தையனுஷ்டித்து சுகப்படுவார்களாக.

சுபம். பத்திராதிபர்,

ஆர்ய தர்மம்.
சுக்ல-௵ ஆடி-௴ ௩௧௳

# தர்மவ்யவஸ்தையைச்செய்வதுயார்?

இந்தக்கேள்விக்கு பதிலுரைப்பவர் காலக்கொடுமையால் கூட்டத்தில் கோவிந்தம் போடுபவர்போல் கூட்டத்தில் கைதூக்குபவரெல்லாம் தோன்றிவிட்டனர். தர்மமென்பது அவ்வளவு எளிதில் வியவஸ்தை செய்யக்கூடியதுமல்ல. குருட்டுத்தனமாய்க் கைதூக்குகின்றவரெல்லாம் அதன் வியவஸ்தை செய்பவருமல்ல. ஏனெனில் தர்மமோ மிக ஸூக்ஷ்மமாயுள்ளது. அங்ஙனமே ஸ்ரீராமாயணத்தில்

" सूक्ष्मः परमदुर्ज्ञेयः सतां धर्मः प्लवङ्गम "

"ஒ வானரா! ஸாதுக்களுடைய தர்மமானது வெகு ஸூக்ஷ்மமானது, எளிதிலறியமுடியாது" என்று கூறப்படுகின்றது. இதில் பிராமணர்களது ஆசாராதிகளொன்றுமில்லாமல் தன்னைப் பிராம்மணஜாதியுடையவனாகச் சொல்லிக்கொள்ளும் பிராமணன் ஆயிரக்கணக்காகக் கூடினாலும் தர்மவியவஸ்தை செய்ய அதிகாரமில்லை என்றால் மற்றவரைப்பற்றி கேட்கவும் வேண்டுமோ? அங்ஙனமே

अव्रतानाममन्त्राणां जातिमात्रोपजीविनाम् ।
सहस्रशस्समेतानां परिषत्त्वं न विद्यते ॥

"தாங்கள் இன்னஜாதிக்காரரென்றுள்ள பெயரைமாத்திரம் வைத்துக்கொண்டு விரதம், மந்திரம், ஆசாரணை முதலிய பிராமணதர்மமில்லாதவர் ஆயிரக்கணக்காக அனேகர் கூடினாலும் அது தர்மவியவஸ்தையைச் செய்ய அதிகாரம்பெற்ற ஸபையாகமாட்டாது."

என்று ஸ்மிருதிகளில் கூறப்படுகின்றது. தர்மவியவஸ்தையைச் செய்யும் பரிஷத்தின் லக்ஷணம் தர்மசாஸ்திரங்களில் விரிவாகக் கூறப்படுகின்றது. சுருதியிலுமிது பிரஸித்தமாயுள்ளது. அத்

தகைப ஸபையோர்களைக் கலந்துகொள்ளாமலும், கேட்டுக் கொள்ளாமலும் தர்மவியவஸ்தை செய்ய முன்வருபவர்களுக்கு

अपृष्ट्वा बुद्धिसंपन्नान् वृद्धानाचार्यसंमतान् ।
सौम्य वानर चापल्यात् किं मां वक्तुमिहार्हसि ॥

"ஆசாரியர்களால் ஸம்மதிக்கப்பட்டவர்களும், புத்தி சக்தி நிறைந்தவர்களுமான பெரியோர்களைக் கேட்காமல், அடா வானரமே! சாபல்யத்தால் என்னைக்குறித்து என்ன சொல்லப்பார்க்கிறாய்?"

என்றுள்ள ஸ்ரீராமாயணவசனத்தை உதாஹரிக்கவேண்டும். அதனால் பெரியோர்கள் வாக்கியத்தாற்றான் தர்மத்தை நிர்ணயம் செய்யவேண்டுமென்று ஏற்படுகின்றது. அந்தப் பெரியோர்களும் வேதத்தைப் பிரமாணமாகக்கொண்டுதான் தர்மநிருபணம் செய்யவேண்டும்.

चातुर्वर्ण्यं त्रयो लोकाः चत्वारश्चाश्रमाः पृथक् ।
भूतं भव्यं भविष्यच्च सर्वं वेदात्प्रसिद्ध्यति ॥

"பிராம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களென்னும் நான்கு வர்ணங்களும் பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் ஆகிய மூன்று உலகங்களும், பிரம்மசரியம், கார்ஹஸ்தியம், வானப்ரஸ்தம் ஸன்னியாசம் ஆகிய நான்கு ஆசிரமங்களும், மூன்று காலங்களும்,இவையெல்லாம் வேதத்தால் ஸித்திக்கப்பட்டவைகள்"

என்றபடி வேதத்தையே ஸர்வஸாதகப் பிரமாணமாக விதிக்கின்றபடியால் அதைவிட்டு வேறு ஒன்றையும் ஆதாரமாகக் கொள்ளக் கூடாது. அதிலும் தர்மத்தில் ஸம்சயம் நேர்ந்தபோது அதன் நிர்ணயத்தைத் தெரிந்துகொள்ள விரும்பிக்கேட்பவர்களுக்குத்தான் சொல்லவேண்டும். கேட்காதவர்களுக்குச் சொல்லக்கூடாதென்று "नापृष्टः कस्यचिद्ब्रूयात्" என்பதாதிவசனங்கள் போதிக்கின்றன. இப்படிக்கெல்லாமிருக்கையில் தற்காலத்தில் பிராமணர்களது தர்மத்தைப் பிராமணரல்லாதார் கூட்டம் போட்டுக்கொண்டு ஸம்சயம் நேராமலிருக்கும்பொழுதே, ஒருவரும் கேட்க முன் வாராமலிருக்கும்பொழுதே வைதிக ஸித்தாந்தத்திற்கு முற்றிலும் விரோதமாகவே வியவஸ்தை, செய்ய முயலுகின்றனர். தார்மிகர் எவர்தான் இதை அங்கீகரிப்பர். தற்காலத்தில் புதிதுபுதிதாக நாளுக்கொரு ஸமாஜம் முளைக்கின்றது. அதன்

பெயரைக் கேட்கும்பொழுது நமது ஆரியச் சிறுவர்களுக்கு மதிமயக்கம் உண்டாகிறது. உதாரணமாக ப்ரம்மஸமாஜம், ஆரியஸமாஜம் முதலிய ஸம்ஸ்க்ருத சப்தமாகத்தோன்றுவனபற்றி இதிற் கூறப்படுவதும் ஆரியாசாரத்திற் சேர்ந்ததோவென்று சிறுவர்களுக்குத் தோன்றுகின்றது. இது விஷயத்தில் பற்பல ஆக்ஷேபங்கள் செய்யவேண்டியதுண்டு. 'ப்ரம்ம' என்ற சப்தமும், "ஸமாஜ" என்ற சப்தமும், அதுபோல் "ஆர்ய" என்ற சப்தமும், "ஸமாஜ" என்ற சப்தமும், தனித்தனியே ஸம்ஸ்க்ருத சப்தமாயினும் 'பிரம்மஸமாஜ' என்பதும், 'ஆர்யஸமாஜ' என்பதும் நம் சாஸ்திரஸம்மதமானதோர்ஸபையென்று சொல்வதற்கில்லை. 'பிரம்ம' என்றபதமும் 'ஸமாஜ' என்றபதமும் அநாதி ஆனதாயினும் ப்ரம்மஸமாஜம் என்பது புதியதே. எங்ஙனமெனில்— உலகத்தில் மலடிமகன் உண்டா எனில் இல்லையென்றே மறுமொழி அளிக்கவேண்டியது உசிதமானவழி. அவ்வழி விட்டு 'மலடி' என்ற பதம் புதியதா? 'மகன்' என்ற பதந்தான் புதியதா? இவைகள் அநாதிகள் தானே. இவைகளின் சேர்க்கையாலுண்டான 'மலடிமகன்' என்ற பதமும் ஒரு ஸத்தியமான பொருளைத்தானே போதிக்கவேண்டும். ஆகவே மலடிமகனில்லை என்பது எப்படிப்பொருந்துமென்று ஓர் கேள்வியை கேட்டுக்கொண்டு உடனே இவ்விரண்டு சொற்களும் அநாதியாதலால்அம் மலடி மகன் அநாதியாயுள்ளவனே எனக்கூறும் மறுமொழிஎங்ஙனம் ஒவ்வும். அதுபோலவே,கீழ்கூறியஸமாஜங்களுமாகும். அவைகள் தர்மமார்க்கத்தை அழிப்பதற்கு கோமுக வியாக்ரம்போல் கிளம்பியிருப்பதால் அதன் வாயில் க்ஷேமத்தை விரும்பும் தார்மிகர் விழுந்து போகக் கூடாது. இவையெல்லாம் போதாதென்று பிராமணர்களது விவாஹத்தைப்பற்றியும் பலர் பேசத்தொடங்கிவிட்டார்கள். பாலிகா விவாஹத்தைப்பற்றி விபரீதமாகப் பேசிக்கொள்ளப்படுகிறதென்பது க்ராமாந்தர மூலையில் வஸித்துக்கொண்டு தர்மசீலர்களாயுள்ளவர்களுக்கு கலிமஹாராஜனது தூதர்களின் கோலாஹலம் காதில் விழுவேயில்லை. அன்றியும் இந்த பாலிகாவிவாஹம் சரியா? தப்பா?. என்று தார்மிகரான எந்தப் பிராமணருக்கு ஸம்சயமுண்டாயிற்று? எவர் இதன் நிர்ணயத்தைப்பற்றி பிரச்னம் செய்தார்? எதற்காக இந்த மசோதாக்கள் கொண்டுவரப்படுகின்றன என்பது ஒன்றும் புரியாமலேஉலகம்

தலைகீழாய்ப் புரண்டு கிடக்கின்றது. இந்த வார்த்தை கிராமமூலையிலிருக்கும் தார்மிகர்கள் காதில்விழுவே திடுக்கிட்டு இப்பொழுதுதான் ஒவ்வொருவராகக்கிளம்புகின்றார். ஆங்காங்கு கண்டனக் கூட்டம் பலமாகக்கூட்டப்படுகின்றது. தற்சமயம் சீர்காழியில் நடைபெற்ற கும்பகோணம் அத்வைத சபையிலும் இதைப்பற்றி ஒரு விமர்சம் செய்யப்பட்டு அடியில் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின. பாலிகாவிவாகம் பிசகென்று ஸ்தாபிக்க பிரமாணங்களில்லை. ஆகையால் அதைப்பற்றி சட்டசபையில் கொண்டுவந்த மசோதாப்படி சட்டம் செய்யக் கூடாது, மதஸம்பந்தமான இவ்விஷயத்தில் மஹாராணியாரவர்கள் பிரதிக்ஞைசெய்துகொடுத்தபடி ராஜாங்கத்தாரும் தலையிடக் கூடாதென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்—என்று இவ்வாறு பற்பலவிடங்களில் கண்டன கூட்டம் சேர்ந்துதீர்மானித்ததை ராஜப்ரதிநிதி அவர்கள்முன்னிலையில் நேரில்தெரிவிக்க தார்மிகப்பிரதிநிதிகளாகதர்மசிரத்தையுள்ள அனேகர் அனுப்பப்படுகிறார்களென்பதைக் கேட்டு கிராமாந்திரவாஸிகள் சந்தோஷிக்கின்றார்கள். ஆதலால் இவ்விஷயத்தில் நமது பெரியோர்கள் கூறியபடி நடந்து யாவரும் க்ஷேமத்தையடைவார்களாக.

சுபம் !

பத்திராதிபர்.

---

# ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷித சரிதம்.

(432-வது பக்கத்தொடர்ச்சி.)

## 50 தீக்ஷிதாளின் காலத்திலுள்ள வர்ணாசிரமாசாரம்.

நமது தீக்ஷிதாள் நித்தியநைமித்திக கர்மாநுஷ்டானஞ்செய்வதையும், சிஷ்யாளுக்கு பாடப்ரவசனஞ்செய்வதையும்,ஒழிவுள்ள நேரத்தில் கிரந்தங்கள் இயற்றுவதையும், தன்னை அன்புடன் வேண்டும் மன்னவர்களுக்கு ராஜ்யஸ்திதியில் இருக்கவேண்டிய தர்மங்களைப் புகட்டுவதையும், உசிதமான காலத்தில் பகவத் தர்சனஞ் செய்வதையும், தர்மநெறியறியாத மூர்க்கர்களையும் கூடுமானவரையில் நல்வழிப்படுத்துவதையும், சக்திக்குத் தக்கவாறு

பரோபகாரஞ்செய்வதையும் கண்டுகளித்த வித்வான்களும் அவர்களுக்கு ஈடுபட்ட மற்றவரும் அவர்களின் வழியையே பின்பற்றினர்.

மேலும் வர்ணாசிரமாநுகூலமான மார்க்கத்தைக் கைவிட்டவர்கள் பச்சாத்தாபங்கொண்டு சரணமடைந்தபோது, சாஸ்திரோக்தமான பிராயச்சித்தத்தைச்செய்வித்து அவர்களை ஸரியான நிலைமையில் இருக்கச்செய்வார்கள்.

அவர்களுடைய காலத்தில் ஸோமாதிகளான ஸப்தஸமஸ்தைகள் செய்யாத ச்ரோத்திரியர்கள் அரிது. அவர்களுடைய முயற்சி வேதாத்தியனஞ் செய்வித்தல், சாஸ்திரங்களைப் பிரசாரப்படுத்தல், ஈச்வரபக்தியைத்திடப்படுத்தல் முதலான நல்வழிகளைப் பற்றி இங்கு எடுத்துக்கூறவேண்டிய தேவையேயில்லையாது. இந்நாளிலும் ஒருவனை ப்ரசம்ஸைசெய்ய ஸந்தர்ப்பம் ஏற்பட்டால் அப்பய்யதீக்ஷிதாள் இவர்கள் என்று ஸாமான்யர்களும் கூறுவது வழக்கம். தீக்ஷிதாள்காலத்தில் மாதம் மும்மாரி மழைபெய்து உலகம் சுபிக்ஷமாயிற்று.

அவர்களின் உபதேசமொழியின் ஸாரம்—

कालदेशानुगुण्येन साधकानुग्रहेच्छया ।
इदं विधीयते सर्वप्रायश्चित्तं महागसाम् ॥

नियमेन तदष्टमूर्तिनाम प्रजपन्नष्टसहस्रमेव नित्यम् ।
अथवाऽर्धतदर्धमादधानो जपमालां कलुषाद्विमुक्तिमेति ॥

காலதேசங்களையநுஸரித்து வேண்டுபவர்களின் அநுக்கிரகத்தை நாடி, பெருங்குற்றவாளிகளுக்கு இந்த பிராயச்சித்தம் விதிக்கப்படுகின்றது—ஒவ்வொரு தினமும் நியமத்துடன் பரமசிவனின் திருநாமத்தை ஜபமாலையைத் தரித்துக்கொண்டு எண்ணாயிரமோ, அதற்குப்பாதியோ, முடியாமற்போனால் அதிலும் பாதியோ ஜபிக்கிறவன் பாபம் நீங்கப்பெற்று மோக்ஷத்தைப் பெறுகிறான் என்பது முதலானவைகள்.

## 51. கங்காயாத்திரை செய்ததாக சிவாநந்தயோகிகளின் அபிப்பிராயம்.

நமது தீக்ஷிதாள் தென்தேயத்திலேயே வர்ணாசிரமதர்மங்களை நன்கு நடத்தி கீர்த்தியாலேயே வடதிசைகளிலும் சாஸ்திரங்களைப்

பரவச்செய்தனர் என்று வெகுபேர்களின் அபிப்பிராயத்தை அறிந்து முன்பு காசியாத்திரை செய்ததாகத்தெரியவில்லை என்று முன்பு எழுதியுள்ளேன்.

ஆனாலும் சிவாநந்தயோகிகளின் கருத்து காசியாத்திரை செய்ததாகத் தெரிகிறதால் அதையும் இங்கு அறிவிக்க முன் வருகிறேன்.

நமது தீக்ஷிதாள் நரஸிம்மராஜாவிடம் தங்கின ஸந்தர்ப்பத்தில் கௌடதேசத்துப்பண்டிதர்கள் துரூஹங்களான கேள்விகளை ச்லோகங்களால் வெளியிட்டனுப்பவே அவைகளுக்குத்தக்க விடைகளையளித்து அனுப்பினர். அப்போது அவர்கள் மறுபடியும் விடைகளின் கருத்தறியாமல்

**आरम्भशूराः खलु दाक्षिणात्याः** தென்தேயத்தார் தொடக்கத்தில் சூரர்கள் என்று எழுதியனுப்பினர்.

பிறகு மறுபடியும் தீக்ஷிதாள் நக்ஷத்திரவாதாவளி முதலான நூற்களை அனுப்பவே, அவைகளின் கம்பீராசயத்தையறிந்த அந்த கௌடதேசத்து வித்வான்கள் வணக்கத்தோடு இம்மாதிரி கேட்டுக்கொண்டனர்.

सकलभुवनसारा पुण्यभूमिस्सरिद्वा
मृतिरिह शुभवार्ता मुक्तिरेति स्वयं तत् ।
निखिलतनुभृतां नः तारकब्रह्मदाता
परम शिव इहास्ते किं कुतो नागतोऽसि ॥

ஸகலபுவனங்களுக்கும் ஸாரபூதமான புண்ணிய பூமியாகிய காசி க்ஷேத்திரமும், கங்காநதியும், காசிமாநகரில் மரணம் என்ற மங்கள வார்த்தையும் ஆகிய இவை மோக்ஷத்திற்கு ஸாதனங்கள் ஆகின்றன. ஸகலப்பிராணிகளுக்கும் முடிவில் தாரகப்ரும்மத்தை உபதேசிக்கிற விச்வநாதர் இங்கு எப்போதும்ஸாந்நித்தியம் வஹிக்கிறார். இவ்வாறிருக்க இங்கு ஏன் தாங்கள் வரவில்லை ? என்று பலதடவை பல வித்வான்கள் மூலமாகவே செய்தியனுப்பவே, தீக்ஷிதாள் எழுதியனுப்பிய உத்திரமாவது:—

सत्योऽयमपि वः प्रश्नः सूरयः शृणुतादरात् ।
तथ्यं पथ्यं समाधानं यथा मन्मनसि स्थितम् ॥

भावना यदि भवेत्फलदात्री मामकं भवनमेव हि काशी ।
व्यापको यदि भवेत्परमात्मा तारकं किमिति नोपदिशेन्नः ॥

एतावदायुर्नृप कौतुकाय नीतं नटेनेव मया सहासम् ।
इतःपरं त्वात्मसुखानुभूत्यै बुधा यतिष्ये समनुमहीष्ट ॥

வித்வான்களே? உங்கள் கேள்வி உண்மையானாலும் என் மனதிலுள்ள வாஸ்தவமும், ஹிதமுமான சமாதானத்தைச் சொல்லுகிறேன். ஆதரவுடன் கேளுங்கள். ஈசுவரனிடம் உள்ள மனோபாவனையானது பயனையளிக்கும் என்பது உறுதியானால், எனது வீடே எனக்குக் காசிநகரமாகும். பரமாத்மாவான விசுவேசர் வியாபியான வஸ்துவானால் ஏன் அவர் தாரகமந்திரத்தை உள்ள இடத்திலேயே உபதேசிக்கமாட்டார். இவ்வளவு ஆயுளும் விந்தையாகவே ஆவலோடு நடன்போன்ற என்னால்கழிக்கப்பட்டது. வித்வான்களே? இதற்குப் பிறகு ஆத்ம சுகத்தை அனுபவிப்பதற்கு யத்தனிக்கப் போகின்றேன்" என்று செய்தியனுப்பிப் புறப்பட சந்நத்தமானார்கள்.

பிறகு புண்ணியமான முஹூர்த்தத்தில் ஆப்தர்களோடு பிரயாணமாகவே, தீக்ஷிதாளுக்கு வேண்டிய ஸௌகர்யங்களைச்சின்ன பொம்மன், நரஸிம்மராஜன் முதலானவர்கள் செய்துகொடுத்து அனுப்பினார்கள். பிரதக்ஷிணக்கிரமமாய் அவர்கள் காசியை அடைந்து அங்குள்ள மஹாவித்வான்களால் மேன்மைப்படுத்தப்பட்டு, கங்காஸ்நானம், விசுவநாத பூஜை, ஜபம், சிராத்தம், தானம் இவைகளை நடத்தி அத்தேசத்து ராஜாக்களாலும் விருதுகளோடு பல்லக்கில் அனுப்பப்பட்டுத் தென்தேயம் வந்தார்கள்.

வரும்போது வெங்கடகிரி, அருணாசலம், விருத்தாசலம் வழியாக வந்து சிதம்பரத்திலும், சிறிதுகாலம் காவேரி தீரத்திலும் தங்கினர்.

## 52. தீக்ஷிதாள் சிதம்பரத்தில் தங்கினது.

அவர்களின் திரும்பிவருகையை அறிந்த தஞ்சை நரஸிம்மராஜனும் வேலூர் சின்னபொம்மபூபதியும் அங்கங்கே வேண்டிய உபசாரங்கள் செய்து தங்களைத் தன்யர்களாக்கிக்கொண்டனர்.

ஈச்வராம்சமாகிய நமது தீக்ஷிதாள் இவ்விதம் யாத்திரையை முடித்து முடிவில் சிதம்பரத்தில் ஞானப்பிரகாசம்என்னும் பிரதேசத்தில் விடுதி அமைத்துக்கொண்டு அநுதினமும் ஸ்ரீசிவகாமிநேசனை ஸ்ரீ பொன்னம்பலத்தரசனிடம் ஈடுபட்டு தர்சனம் பண்ணி வேதமார்க்கத்தை நிலைநாட்டிக்கொண்டுவந்தனர்.

இம்மஹானால் செய்யப்பட்ட கிரந்தங்களை இங்கு விளக்கிக் காட்டுவதை இப்போது நிறுத்திக்கொண்டு தனியாய் எழுதலாம் என்று கருதி, சிறிதுமட்டிலும் எழுதி நிறுத்திக்கொள்கிறேன்.

இம்மஹான் கோவிந்தர், நடராஜர் இருவருடைய ஸந்நிதியில் ஸமகாலத்தில் இருவரையும் குறித்துச்செய்த ஸ்தோத்திரங்கள் (100) நூறில் ஒன்றுமட்டிலும் பிரஸித்தமாயுள்ளது. அதாவது

मारमणमुमारमणं फणधरतल्पं फणाधराकल्पम् ।
मुरमथनं पुरमथनं वन्दे बाणारिमक्षमबाणारिम् ॥

ஸ்ரீகாந்தனையும், உமாகாந்தனையும், சேஷசாயியையும்,சேஷபூஷணனையும், முராரியையும், புராரியையும், பாணாரியையும், மன்மதாரதியையும் வணங்குகிறேன்.

ஸ்ரீநடராஜாவுக்குச் சந்தனாபிஷேகம் செய்தகாலத்தில்

मौलौ गङ्गाशशाङ्कौ करचरणतले कोमलाङ्गा भुजङ्गाः
वामे भागे दयार्द्रा हिमगिरितनया चन्दनं सर्वगात्रे ।
इत्थं शीतं प्रभूतं तव कनकसभानाथ वोढुं क शक्तिः
चित्ते निर्वेदतप्ते यदि भवति न ते नित्यवासो मदीये ॥

பொன்னம்பலத்தரசனே! உமக்கு சீதஜ்வரம் மேலிட்டுவிட்டது. அதை ஸஹிக்க உமக்குச்சக்தியில்லை. ஏனெனில், அதை வளரச் செய்யவேண்டிய சக்தியுள்ளவைகளே உம்மை வளைந்து நிற்கின்றன. உலகத்தில் சைத்தியத்திற்கு எவைகள் இருப்பிடமோ, அவைகள் யாவும் உம்மிடத்தில் காணப்படுகின்றன. தங்களது சிரஸ்ஸில் கங்காதேவியும் சீதகிரணனும் இருக்கின்றனர். கைகளிலும், கால்களிலும் மிருதுவான அங்கங்களோடுகூடின ஸர்ப்பங்கள் இருக்கின்றன. உமது இடதுபாகத்திலிருப்பவளோ தயாரூபிணியான பனிமலையின் மகள். இவ்வளவோடு நிற்காமல்

ஸகலமான அங்கத்திலும் சந்தனத்தைப் பூசிக்கொண்டிருக்கிறீர். இதற்குப் பரிகாரம் செய்ய எந்த வைத்தியராலும் ஸாத்தியப் படாது. ஆனால் நான் ஒரு உபாயஞ்சொல்லுகிறேன். வியாதி யுள்ளவர் தங்களிருப்பிடத்தை விட்டு வேறிடத்தில் நோயைப் போக்கிக் கொள்வதைக் கண்டிருக்கிறேன். அதாவது குத்தாலம், கொடைக்கானல் முதலிய சில பூமிகள் சில வியாதிகளைப்போக்கு கின்றன என்பது பிரசித்தம். அவ்விடஞ்சென்றால் சீதம் அதிகப் படுமே தவிர சாந்தமாகாது. இந்த உமது சீதஜ்வரத்திற்கு உஷ்ணம் தேசமே வேண்டும். அதற்குத் தகுந்த இடம் என்னிடமே ஸ்வாதீனமாயுள்ளது. அதை நான் உமக்கு வஸிக்கக்கொடுத்தால் உமதுவியாதி நிச்சயம்நீங்கும். ஆனாலும் சிறிதுகாலம்இருந்துஸ்வஸ்தமானதும் போய்விடலாமென்று நினைத்துப்போவது முடியாத காரியம். மறுபடியும் உம்மை அவ்வியாதி தொடரும். இங்கே தாங்கள் எத்துணைகாலமிருந்தாலும் அந்த சீதத்தைப்போக்கும் தன்மையுள்ளது எனது சொந்த இடம். அதாவது—சித்தம் என்ற ஸ்தலம். இந்த சித்தம் எத்துணையோ ஜன்மங்களில் ஏற்பட்ட (நிர்வேதங்கள்) துக்க ஸாமக்ரிகளால் ஓயாமல் தப்பித்துக் கொண்டிருக்கிறது. ஆகையால் அச்சித்தத்தில் நித்யமானவாஸம் செய்தால் அப்பிணியின் உபத்திரவம் நீங்கப்பெறுவீர்.

இதனால் என் மனதை விட்டகலாமலிருக்கும்படி, தங்களுடைய பக்தியை நிலைக்கும்படி செய்ய வேண்டுகிறேன் என்று உட்கருத்து விளங்குகின்றது.

இவ்வாறு இம்மஹான் தனக்கு முடிவான காலத்தைத் தெரிந்துகொண்டு வைராக்கியம் மேலிட்டு நடராஜனிடம் ஐக்கியமாவதற்கு எண்ணங்கொண்டு தில்லையிலேயே வாழ்ந்துகொண்டிருந்தனர். இம்மஹானுடைய சரித்திரத்தை இனி முடிவுறையாக எழுதப்பிரவிருத்திக்கும்போது என்னுடைய லேகினி இடங்கொடுக்காது, மேன்மேலும் என்னைத்தூண்டுகிறது. ஆயினும் பெரியோர்களிடம் பழகும்போது தெரியக்கூடியவைகளை எழுதுவதற்குப்பின்பும் கருத்திருப்பதால் ஒருவாறு எழுதுகோலுக்கு தற்சமயம் கொஞ்சம் ஸாவகாசம் கொடுக்க எண்ணங்கொண்டு அடுத்த வியாஸத்தில் சரித்திரத்தை முடித்துக்கொள்கிறேன்.

(தொடரும்.) கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்

# சோழமன்னர்களின் சரித்திரம்.

(425-வது பக்கத்தொடர்ச்சி.)

## அத்தியாயம் 10.

ஸூதர்:— அவ்வரசனின் மகன் கரிகாலன் என்னுமன்னவன் காஞ்சநாங்கி என்னுமோர் மகளை மணந்து, அம்மனைவியுடன் ஸந்தோஷமாக இருந்துகொண்டு தன் பராக்கிரமத்தால் இச்சோழபூமியையாண்டுவந்தான்.

तस्याभूत् गुरुरुत्कृष्टः हरदत्ताभिधो द्विजः ।
शिवभक्तो महाभागः शिवभक्तस्य भूपतेः ॥

சிவபக்தனிற்சிறந்த அவனுக்கு மஹா மஹிமை பொருந்தி சிவபக்தசிரோமணியாகிய ஹரதத்தர் என்னும் ஓர் அந்தணராசானாக அமைந்தார். அவ்வாசானாணையின்படி அக்கினீச்சுவருடைய (கஞ்சனூர்) ஆலயத்தைச் செய்துமுடித்து தூர்க்கேசம், மங்களேசம் மிக்கதோர் புண்ணிய க்ஷேத்திரமாகிய ஆம்ரவனேசம்முதலிய ஆலயங்களையும் கட்டுவித்தான். அவ்வேந்தன் தன் குடிகளைத் தன்வயிற்றிலுதித்த மக்களைப்போல் தர்மத்தோடு பாதுகார்த்துவந்தான்.

ஸூதர்:— அவ்வேந்தன் இவ்வாறு இச்சோழதேசத்தை ஆண்டு வருகையில்,

जन्मान्तरांहसा तस्य कृष्णः कुष्ठोऽभवत्तनौ ।

முற்பிறப்பிற்செய்த தீவினையின் பயனாகத் தன் சரீரத்திற்கருங்குட்டமுண்டாயிற்று. அதனால் இரவுபகலாக மிக்கத்துக்கமுற்று மனத்தாபத்தையடைந்த அவ்வரசன் ஹரதத்தரென்னும் அந்தணர்தலைவனான தன்னாசானை வணங்கிச் சொல்லலானான்.

கரிகாலன்:— ஹே பிராமணோத்தமரே! உம்மை வணங்கின எனக்கு அருள்புரிவீராக. எனக்கு இவ்விராஜ்ஜியத்தினாலாவது மேன்மையான போகங்களையனுபவிப்பதனாலாவது எனக்குச் சிறிதும் ஸந்தோஷமேற்படவில்லை. ஏ அந்தணரே! பிரஜைகளைத் தன் மக்களைப்போல் ஆண்டுவருகிறேன். பல அக்கிர

ஹாரங்களையும், அன்னசத்திரங்களையும், தண்ணீர்ப்பந்தல்களையு மேற்படுத்தினேன். ஷோடசமஹாதானங்களைப் பதினாறுமுறை செய்தேன். பல சிவாலயங்களையும், சில ஸ்வயம்பூஸ்தானங்களையுங்கட்டுவித்தேன். கோதானகன்யகாதானங்களைச் சற்பாத்திரங்களிற் செய்தேன். அவ்வாறுசெய்தும் என் சரீரத்திலுள்ள குஷ்டம் சிறிதும் நீங்கவில்லையே. என்செய்வேன்! உமதடிமலர்களையே சரணமடைந்தேன். ஆசானாகிய நீர்தான் என் துக்கத்தை நீக்கவேண்டும். ஸாக்ஷாத் சங்கரபக்தராகிய நீர்தான் நன்காலோசித்து இதனைப்போக்க உபாயம் தேட வேண்டும்.

அவ்வரசன்மொழிகளைக் கேட்ட ஹரதத்தர் 'எ அரசசிரேஷ்டனே! துக்கத்தையொழியும், நான் சிவனைப்பிரார்த்தித்துக் கேட்கிறேன், ஒருமண்டலம்வரை எனக்காகக் காத்திரும், அதன் பிறகு ஒரு உபாயத்தைத் தீர்மானமாய்ச் சொல்லுகிறேன்' என்றார்.

இவ்வாறு கூறிவிட்டு பல்லக்கிலேறி அக்கினீச்சுவரம் சென்றார். அங்குள்ள சிவபக்தர்களுடன் ஆலோசித்து அவ்விடத்தில் அக்கினீச்சுவரர் அருகேயோடுங்காவேரித்துறையில் அதிகாலையில் மூழ்கி, விபூதி ருத்திராக்ஷமணிந்து, உப்புநீக்கி உணவெடுத்துக் கொண்டு மஹாசாந்தர்களான சிவபக்தர்களுடன் அங்கு சிவாலயத்திற்குட்சென்று, தினமும் பதினாயிரம்முறை பஞ்சாக்ஷரஜபம் செய்துகொண்டு மஹாபிஷேகம், பூஜை முதலியவைகளால் சிவனைச் சந்தோஷமுறச்செய்தார். சிவாகமங்களிற் தேற்சிபெற்ற சிவத்விஜர்களின் வம்சத்தில் பிறந்தவர்களால் பட்டுக்கள் சுற்றப்பட்ட தங்கக்குடங்களை முன்னால் வைத்து மஹன்யாஸத்துடன் ருத்திரஜபம் செய்வித்து, அபிஷேகமும் செய்வித்தார். பாதிரி புஷ்பம் அகில் முதலியவற்றால் வாசனையுறச்செய்யப்பட்ட காவேரியின் குளிர்ந்த தண்ணீரால் வேதத்திற் தேற்சியடைந்துள்ள நூற்றெட்டு மறையோர்களைக்கொண்டு ஏகாதசருத்திரஜபத்துடன் மூன்றுவேளையும் அனவாததாரையாய் அக்கினீச்சுவாருக்கு அபிஷேகம் செய்வித்தார். அவ்வாறே உமையாள், கந்தன், கணபதி முதலியோரையும் பூஜித்து ஸ்தோத்திரம் செய்யலானார்.

ஹரதத்தர்:— சந்திரகலை பூண்டவரே! கங்கையை முடியிற் தாங்கியவரே! பவ்யரே! உக்கிரரே! சடைமுடியுடையீரே! முக்கண்

படைத்தவரே! பெருந்தேவரே! படைப்போரே! நன்மையளிப்போரே! பக்தர்களின் துயரைப்போக்குவீரே! காலன், அந்தகன், மன்மதன் இவர்களையழித்தவரே! வ்யோமகேசரே! ஏ பார்வதீ பதியே! உம்மை வணங்குகிறேன்.

இவ்வாறு முக்காலமும் தியானபூர்வமாய் ஸ்தோத்திரம் செய்துகொண்டும், நடு இரவில் மற்ற பிராமணர்களுடன் பூமியிற் படுத்துக்கொண்டும் இவ்வாறு ஒருமண்டலம்வரையில் அச்சிவாலயத்தில் வசித்துவந்தார்.

## அத்தியாயம் 11.

ஸூதர்:— அப்பொழுது அங்கு ஆலயத்திற் சிவனுக்கெதிரே உறங்குகின்ற ஹரதத்தரின் கனவில் அம்பிலி, கங்கை இவ்விரண்டையும் முடியிலணிந்தவரும், பாம்பையணியாய்ப் பூண்டவரும், ருத்திராக்ஷம் தரித்தவரும், திருநீரு பூசியவரும், திருபுண்டிரமுடையவருமாக மஹேசர் உமையுடன் தோன்றி, 'ஏ அந்தணரே! நான் கரிகாலன்விஷயத்திற் சந்தோஷமடைந்தேன். அவ்வரசனிடம் என் விருப்பத்தை முற்றுங்கூறுவீராக' வெனக்கூறிப் பின்னும் சொல்லலானார்.

ஈசன்:— முற்பிறப்பிலிவ்வரசன் காளஹஸ்தியிலோர் வேடனாக இருந்தான். சிவராத்திரியன்று காளஹஸ்தீச்சுவரராகிய என்னையும் ஞானம்பிகையையுந் தெரிசித்ததின்பயனாக இவ்விராஜ்யம் பெற்றான்.

बहुहिंसात्वदोषेण कृणकुष्ठो बभूवह ।

பல ஜீவன்களையும் வதைத்த குற்றத்தாற்கருங்குட்டமேற்பட்டது. இவ்வரசனின்சரீரத்திலுள்ள குட்டம்நீங்கப்பின்வழிகூறுகிறேன்.

முன் தண்டகாரண்யத்தில் ஜனஸ்தானத்தின் தலைவனாக இருந்த கரன் மிக்கநியமத்துடன் பராசரவனத்தில் தினமும் யானையளவுடையதாய் நூற்றெட்டுமண்லிங்களைப்பிடித்துவைத்துப் பூஜித்துவந்தான். ஸ்வயம்புலிங்கமாகிய தஞ்சேசரின் நிருருதியில் கரதலேசரின் மேற்கில் சிவகங்கையென்னு மோருத்தம தீர்த்தமிருக்கிறது. அதனைக்கண்டு ஸ்னானபானஞ்செய்யினெல்லாப்பாவங்களும் விலகும். கொங்கணேசருக்குத் தெற்கிலுஞ் சக்திகூபத்

திற்கு மேற்கிலுமுள்ள கந்தரின் சந்நிதியிலின்று மக்கந்தரிருந் துவருகிறார். கார்த்திகைமாதக் கிருத்திகையன்றவரைக் காண்பவர் மிக்கப்புண்ணியம் பெறுவர். அத்தீர்த்தத்தின் தென்றிசையிலெப் பொழுதும் சரனால் பூசிக்கப்பட்ட லிங்கங்களினோர் பெரியகுவி யலைக் காணலாம், அவ்விடத்தை தேவகாதம் ( देवखात ) என்று சிற்பிகளிற் சிறந்தவர்கள் கூறுகின்றனர்.

அந்த க்ஷேத்திரத்திலிவ்வரசனுலோர் பெரியவாலயங்கட்டு வித்து, தேவி, ஸ்கந்தர், கணேசருட னெனக்கும் பீடமூலம்வரை யிற் கற்களாலேயே யமைத்து, பிராகாரங்களகழிகளிவைகளுட் னிருகோபுரங்களுங் கட்டுவிப்பாயாக. ஸ்ரீமத் கரதலேசரின் வட திசையில் தோந்தி விநாயகரை விக்கினங்களைப் போக்குமாறு பிரதிஷ்டைசெய்து அதன் கர்ப்பக்கிரஹத்திற் கேற்றபடி பாண லிங்கத்தைக் கொண்டுவரவேண்டும். நீயுமரசனும் புண்யதீர்த்த மாகிய நர்மதைக்குச்சென்று, அங்கு ஓங்காரகுண்டத்தில் ஸ்நா னஞ்செய்து, அங்கு அரசன்கையிலடங்கும் முதலிற் கிட்டு மிரண்டு லிங்கங்களையும் பிறகு கிடைக்கும் மற்றொன்றையு மெடுத்து, அவைகளிலிரண்டையு மங்கு போடும்படிசெய்வாயாக.

सूक्ष्मं करगतं भूयात् तीरस्थं वृद्धिमेष्यति ।
तन्नाम्ना बृहदीशाख्यं श्रीरुद्रप्रतिपादितम् ॥

கையிலுள்ளது மிக்கச்சிறியதாகும். கரையிலுள்ளது மிக்கப்பெரி தாகும். ஸ்ரீருத்திரனாற் கொடுக்கப்பட்டததுவே பிருஹதீச்சுர வாரென்னும் பெயருடைத்தாகும். அதனைப் புஷ்பமண்டபத் தோடு கூடின சக்கிர எந்திரத்திலேற்றி, பூஜித்து, வணிகர்களைக் கொண்டு இழுத்துவரச்செய். உன்பக்தியாலுமரசன் பக்தியாலும் நான் சிரமத்தைக்கொடுக்காமல் நகர்ந்துசெல்லுகிறேன். என்னை அவ்விடத்திற்குக்கொண்டு சென்று கோயில்கட்டும்வரையில், ஆதி சைவகுலத்துதித்தவர்களும், திருவையாற்றிலிருந்து வந்த வர்களுமான, சிவசேகரன் முதலிய இருபத்தினான்கு சிவத்விஜர் களாலெனக்கு விதிப்படி மஹாபிஷேக தூபதீப நிவேதனங்களு டன் பூஜைசெய்துவரச்செய்வாயாக. அந்த லிங்கத்திற்கேற்றவாறு

பிரும்மபீடத்தையும் விஷ்ணுபீடத்தையுஞ்செய்து, அதன் கர்ப்பக்கிருஹத்தில் வைத்து, அஷ்டபந்த விதிப்படி பிரதிஷ்டைசெய்து விதிப்படி கும்பாபிஷேகத்தையும் நிறைவேற்றிப் பூஜைசெய்யின் நான் பாதாள சூலம்வரையில் பாதாளத்தில் நன்றாய்ப் பதிந்துவிடுகிறேன். நான் ஸ்வயம்பூவாகி விடுகிறேன். என்னைப் பார்த்தவுடனே யெல்லாவிருப்பத்தையும் அடைவார்கள். என்னைத் தரிசிப்பவர்களுக்குத் தர்மார்த்தகாமமோக்ஷங்களைக்கொடுக்கிறேன். புண்யபர்வாக்களில் பக்தியுடனிச் சிவகங்கையில் ஸ்னானஞ்செய்து, பிரஹதீசனாகிய வென்னைக்கண்டு, சில வில்வதளங்களாலர்ச்சித்து தீப தூபத்தைப்போடுகிறவனுக்கு வேண்டியவைகளெல்லா மளிப்பேன். அத்தலத்தில் பிரஹன்னாயிகா வென்னுந்தேவியைப் பிரதிஷ்டைசெய்து அவளுக்குச் சிற்பிகளாலழகிய தோராலயங் கட்டுவித்தும், என் முன்னிலையில் மிக்கவுயரமானதோர் நந்தியையும் சித்தியைக்கொடுக்கவல்லமற்றோர் நந்தியை நிருதி திசையிலும் வைப்பாயாக. லிங்கத்தின் தென்றிசையில் அர்ச்சிப்பதால் நல்ல மழையையுண்டுபண்ணும், மானிடர்களுக் கெல்லாவிருப்பத்தையுமளிக்கும். ஜ்வரங்களையெல்லாம் விலக்கும் அகோரர் என்னும் மூர்த்தியைப் பிரதிஷ்டைசெய்து, கந்தம்பூசி பக்ஷபோஜனங்களை நிவேதனஞ்செய்து, பூஜிப்பாயாக.

சோமன்னால் பூஜிக்கப்பட்டவனும், காஞ்சிபுரத்தில் ஏகாம்பிரநாதருக்குப் பெரிய கோபுரஞ்செய்தவனும், சிற்பித்தலைவனுமாகிய ஸோமவர்மாவென்னுமொருவன் விசுவகர்மகுலத்திலுதித்திருக்கின்றான். அச்சிற்பியைத் தானமானாதிகளால் நன்கு உபசரித்து அவனைக்கொண்டு இவ்வாலயத்தைக்கூறியவாறு செய்துமுடியும்.

ஏ பிராமணோத்தமரே! என்னருளால் அம்மன்னவனின் சரீரமெல்லாமுள்ள அக்கருங்குட்டம் நீங்குமென்பதற்கையமில்லை.

உமையுடன்கூடிய மஹேசன் இவ்வாறு கூறிமறைந்தார். அவ்வாச்சரியக்கனவைக்கண்டு, சிவனாணையைக்கேட்ட ஹரதத்தர் அடங்கா ஆனந்தங்கொண்டார்.

## அத்தியாயம் 12.

ஸூதர்:— ஹரதத்தர் காலையிலெழுந்து, காவேரியில் ஸ்னானஞ்செய்து, அக்கினீச்சுவாரை தர்சித்து, பதினாயிரம் மறையோர்களுக்கன்னமிட்டு, அவ்வக்கினீச்சுவரரின் பிரசாதமாகிய

மேன்மைபொருந்திய திருநீற்றைப்பெற்றுக்கொண்டு, மிக்கக் களிப்புடன் பல்லக்கிலேறி, பட்டீசுவரத்தின் அருகேயுள்ள சோழமன்னனின் இராஜதானியையடைந்தார். அவ்வரசன், சாரர்களால் ஹரதத்தர் வருகைகேட்டு ஸந்தோஷமடைந்து, மந்திரிகளுடனும், பெரியோர்களுடனும் மிக்கப்பிரகாசிக்கின்ற சேனாபதிகளுடனும் மனப்பூர்வமாய்த் தொண்டுசெய்கின்றவர்களும் வாயிலில் தங்கப்பிரம்புகள் பிடித்துநிற்கின்றவர்களுமான சேவகர்களுடனும் எதிர்கொண்டு சென்று, அவ்வந்தணரைப் பக்தியுடன் பணிந்து அழைத்துவந்து, ஸிம்மாஸனத்தில் இருத்தினான். அக்கரிகாலன்என்னும் அரசன்பணிவுடன் கைகூப்பிக்கொண்டு சொல்லலுற்றான்—

கரிகாலன்:— உம்மாலனுக்கிரஹிக்கப்பட்ட நான் மிக்கபாக்கியம்பெற்றேன் தெளிவான வும்முகத்தைத் தரிசித்ததனால்ச் சங்கரனென் விஷயத்திற் பிரசன்னனென்பதற் கையமில்லை. ஏ! குருவே! சிவனாணையைவிட வெனக்குவும்மாணை மிக்க மேலானது. ஆதலால் யோஜனையின்றி சொல்லுமதனைத் தாமதமின்றிச் செய்வேன்.

அரசனினச்சொல்லைக்கேட்டு, பேஷ்! பேஷ்!! என்று புகழ்ந்து கொண்டு, மந்திரிகளும் பிராமண சிரேஷ்டர்களும் சாஸ்திரமறிந்தவர்களும் கவிகளும், மலர்ந்ததாமரையை யொத்த ஹரதத்தரின் முகத்தைப்பார்த்தனர்.

राजानं प्राह विनतं दत्वा श्रीशप्रसादकम् ।
भूतिं तदापयद्राजे हरदत्तः शिवार्चकैः ॥
करिकालः फालतले लापयद्भूतिमुत्तमाम् ।

பணிவுடன்னின்ற வரசனைநோக்கி ஈசனருளைச்சொல்லலானார். ஹரதத்தர் சிவார்ச்சகர்களைக்கொண்டு அரசனுக்கவ்விபூதியைக்கொடுக்கச்செய்தார். கரிகாலனுமவ்வுத்தமத்திருநீரைத் தன்னெற்றியிற் பூசிக்கொண்டான். அவ்விபூதிப்பிரசாதத்தை மந்திரிகளுக்கும் மற்றுமுள்ள பிராமணர்களுக்கும் அரசன் கொடுக்கச்செய்தான். பிறகு ஹரதத்தர் கைகூப்பிக் கொண்டு சபையிலுள்ளோரெல்லோரும் கேட்கும்வண்ணம் அரசனைநோக்கிச் சொல்லத்தொடங்கினார்.

(தொடரும்)

என். வைத்தினாதசாஸ்திரி,
சரஸ்வதிமஹால் தஞ்சை.